பங்கு முதலீடு: ஃபண்டமென்டல் அனாலிசிஸ் - 10

பிரவீன் ரெட்டி, முதன்மை ஆலோசகர், induswealth

## நிதி ஆதாரம் மற்றும் நிதிப் பயன்பாட்டின் முக்கியத்துவம்!

ஒரு நிறுவனத்தின் நிதி நிலையைப் பிரதிபலிப்பதாக அதன் பேலன்ஸ் ஷீட் இருக்கிறது. இந்த பேலன்ஸ் ஷீட்டில் - நிதி ஆதாரம் (Source of funds) மற்றும் நிதிப் பயன்பாடு (Use of funds) முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன. இந்த இரண்டைப் பற்றியும் இப்போது கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம்.

நிதி ஆதாரம் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, ஒரு நிறுவனத்தின் உரிமையாளர்கள் போட்டுள்ள பங்கு மூலதனம் (Equity); இரண்டாவது, ஒரு நிறுவனம் வேறு நிறுவனங்களிடம் அல்லது தனிநபர்களிடம் வாங்கி உள்ள கடன்கள் (debt) ஆகும். கடன் கொடுத்தவர்கள் வட்டி வாங்குவதில் ஆர்வமாக இருப்பார்கள். உரிமையாளர்கள் வருமானத்தைப் பெருக்குவதில் ஆர்வமாக இருப்பார்கள்.

ஒரு நிறுவனத்தின் வருமானம் மற்றும் லாபம் அதிகரிக்கும்போது கடனுக்கான வட்டியை சுலபமாகச் செலுத்தி நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி செல்ல முடியும். கடன் மற்றும் வட்டி சுமை குறைவாக உள்ள நிறுவனங்கள் அல்லது கடனே இல்லாத நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வது மூலம் குறைவான ரிஸ்க்கில் நல்ல லாபம் பார்க்க முடியும்.

நிதி ஆதாரத்தைப் போலவே, நிதிப் பயன்பாடும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. முதல் வகையில், நிலையான சொத்துகள் (Fixed assets) வரும். இதன் கீழ் சொத்து, தொழிற்சாலை மற்றும் கருவிகள், நிறுவனத்தின் பிராண்ட், முதலீடுகள் அடங்கும்.

இரண்டாவது வகையில், நடப்புச் சொத்துகள் (Current assets)வரும். இதன் கீழ் கையிருப்புத் தயாரிப்புப் பொருட்கள், வெளியிலிருந்து வரவேண்டிய தொகை, கையிருப்பு ரொக்கம் உள்ளிட்டவை அடங்கும். ஒரு நிறுவனத்தின் நிர்வாகத் திறமை என்பது நிதி ஆதாரம் மற்றும் நிதிப் பயன்பாட்டைச் சிறப்பாகப் பயன்படுத்துவதில் இருக்கிறது.

**நிதி ஆதாரம்: முதலீட்டாளர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்!**

- ஒரு நிறுவனத்தின் வணிகத் தன்மையை முதலீட்டாளர்கள் புரிந்துகொள்வதன் மூலம் ஒரு நிறுவனம் நடத்த கடன் தேவையா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

- ஒரு நிறுவனம் வாங்கிய கடனை எவ்வளவு காலத்தில் திரும்பக் கட்ட இருக்கிறது என்பதை முதலீட்டாளர்கள் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஒரு நிறுவனம் நீண்ட காலக் கடன் வாங்க வேண்டிய இடத்தில் குறுகிய காலக் கடனை வாங்கி இருக்கும். உதாரணத்துக்கு, ஒரு நிறுவனம் அதற்குத் தேவை யான காரை வங்கிக் கடன் மூலம் வாங்குவதற்குப் பதில் கிரெடிட் கார்டு மூலம் வாங்குவதாக வைத்துக் கொள்வோம். கிரெடிட் கார்டு கடனுக்கு ஆண்டு வட்டி சுமார் 30-35%. இதுவே வங்கி மூலம் கடன் வாங்கி இருந்தால், வட்டி 13-15 சதவிகிதம்தான். இதுபோன்ற நிறுவனங்களில் முதலீட்டாளர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

● நிறுவனம் வாங்கிய கடனை திரும்பக் கட்டும் காலம் மற்றும் வட்டி விகிதத்தைத் தெரிந்து கொள்வது நல்லது.

சுருக்கமாக, ஒரு நிறுவனம் அதன் பங்கு மூலதனம் மற்றும் கடனை எப்படி நிர்வகிக்கிறது என்பதை அறிந்துகொள்வது அவசியம்.

**நிதிப் பயன்பாடு : முதலீட்டாளர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்!**

ஒரு நிறுவனத்தின் நிர்வாகம் அதனிடம் உள்ள நிதியை எப்படிச் செலவிடுகிறது என்பதைக் கூர்ந்து கவனிப்பது அவசியம். அதன்மூலம் அந்த நிறுவனத்தின் வலிமையையும் பலவீனத்தையும் தெரிந்து கொள்ளமுடியும்.

● ஒரு நிறுவனம், பொருள் உற்பத்திக்கு தேவையான கருவியை வாங்க திட்டமிடும் நேரத்தில், சொந்தமாக அந்தக் கருவியை வாங்குவதற்கு பதில் குத்தகையாக அல்லது வாடகைக்கு வாங்கிப் பயன்படுத்தினால் செலவு குறையுமா என்பதை அலசி ஆராய வேண்டும்.

உருக்கு அல்லது அலுமினியம் தயாரிக்கும் தொழிற்சாலை களைக் குத்தகைக்கு எடுப்பது என்பது அதிகச் செலவு வைக்கும் விஷயமாக இருக்கும்.

பெரும்பாலான விமானச் சேவை நிறுவனங்கள் சொந்தமாக விமானங்கள் வாங்குவதற்குப் பதில் அவற்றை வாடகைக்கு எடுப்பது லாபகரமாக இருக்கும். தேவைக்கேற்ப விமானங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ முடியும்.

மேலும், புதிய தொழில்நுட்பம் மேம்படும்போது புதிய ரக விமானங்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ள முடியும். தவிர, பெரிய அளவில் லாபம் இல்லை என்கிறபோது இந்தத் தொழிலில் இருந்து சுலபமாக வெளியேறவும் முடியும்.

● ஒரு நிறுவனம், அதன் மூலதனத்தை மூலப்பொருட்கள் அல்லது தயாரிப்பு பொருட்களாக வைத்திருக்கலாம். அதுபோன்ற நிறுவனங்களை ஒரு முதலீட்டா ளர் கூர்ந்து கவனித்து முதலீட்டு முடிவை எடுப்பது நல்லது.

ஒரு நிறுவனம், மூலப் பொருட்களை அதிக அளவில் வாங்கி இருப்பு வைத்திருக்கிறது என்றால் அதற்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும்.

இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். அந்த நிறுவனத்துக்கு மூலப்பொருட்களைச் சப்ளை செய்பவர் நம்பகத்தன்மை குறைந்தவராக அல்லது சரியான நேரத்தில் சப்ளை செய்யாதவராக இருக்கலாம். நிறுவனம், அதன் உற்பத்தி சுழற்சியை நிர்வகிக்கும் திறமையுடன் இல்லாமல் இருக்கலாம்.

ஒரு நிறுவனம் தயாரித்த பொருட்களை அதிகமாக இருப்பு வைத்திருக்கிறது என்றால் அதற்கான காரணம் என்ன என்று பார்க்க வேண்டும்.

ஒரு நிறுவனம், வருகிற பண்டிகை கால விற்பனைக்காக அதிகமாக முன்னரே அதிக இருப்பு வைத்திருக்கிறது என்றால் அது நல்ல நிறுவனம். அப்படி இல்லாமல் விற்க முடியாமல் அதிக இருப்பு வைத்திருக்கிறது என்றால் அந்த நிறுவனப் பங்குகளில் முதலீடு செய்யும்முன் ஒருமுறைக்குப் பலமுறை யோசிப்பது நல்லது.

இன்றைய நிலையில் ஒரு நிறுவனத்துக்கு மூலதனம் கிடைப்பதென்பதே அரிதாக இருக்கிறது. அந்த வகையில் அதனை ஒரு நிறுவனம் சிறப்பாகப் பயன்படுத்துவது மிக முக்கியம்.

ஒரு நிறுவனத்தின் பேலன்ஸ் ஷீட்டை ஆய்வு செய்யும்போது, ஒரு முதலீட் டாளர் அந்த நிறுவனத்தின் நீண்ட காலநோக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

மேலும், பொருளாதாரம் மற்றும் தொழிலில் குறிப்பிட்ட நிறுவனத்தின் கருத்தை அறிய பேலன்ஸ் ஷீட் ஆய்வு உதவிகரமாக இருக்கும். பேலன்ஸ் ஷீட்டை மாற்றி அமைப்பது என்பது நீண்ட காலம் எடுத்துக் கொள்ளும் ஒரு விஷயம்.

அது சிறப்பாக அமைக்கப்பட்டு இருக்கும்பட்சத்தில் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி சிறப்பானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**தொகுப்பு: சி.சரவணன்**

**(தொடரும்)**

http://www.vikatan.com/article.php?module=magazine&aid=110028